( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-02


# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) சமச்சீர்க் கோடுகள் வரையக்கூடிய உருக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.





(1) B,C (2) A,D (3) C,E

(02) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




(1) E , A , D , C , B (2) C , B , E , D , A (3) E , D , A , B , C


(03) கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பாருங்கள்.



இம்மூன்று உருக்களையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக்கூடிய தனி உரு,




(04) உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெற்றுக்கொள்வதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை,




(1) 4 (2) 3 (3) 5


(05)

| $\frac{1}{2}$ | 1 | $\frac{1}{4}$ | $\frac{3}{4}$ |
|---|---|---|---|
| M | H | P | R |

இந்த நான்கு அட்டைகளிலும் உள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தினால் அட்டைகள் அமையும் ஒழுங்கு,

(1) M , R, H, P (2) P , M, R, H (3) P , H, R, M

(06)





A என்னும் இடத்தில் பயணத்தை ஆரம்பித்த ஒருவர் மீண்டும் ஆரம்ப இடத்தை அடைவதற்குள் வலது புறமாகவும், இடது புறமாகவும் திரும்பிய தடவைகள் எத்தனை?

(1) வலது புறமாக 6 , இடது புறமாக 2 (2) வலது புறமாக 5 , இடது புறமாக

(3) வலது புறமாக 4 , இடது புறமாக 4

(07)




இக்கம்பிச் சட்டகத்தை P எனும் இடத்தில் வெட்டி விரிப்பதன் மூலம் கிடைக்கும் கம்பியின் நீளம்,

(1) 26cm (2) 80cm (3) 36cm


(08) ரூபாய் 5.00 நாணயக் குற்றி, ரூபாய் 10.00 நாணயக் குற்றி என்பன சமனான தடவைகள் வீதம் மேலே சுண்டிவிடப்பட்டன. ஒவ்வொரு நாணயக் குற்றியினதும் A பக்கம், B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாணயக் குற்றிகள் | A பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை | B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ரூபாய் 5.00 | 12 | P |
| ரூபாய் 10.00 | Q | 9 |

அட்டவணையின்படி, P , Q ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

(1) P = 12 , Q = 9 (2) P = 10 , Q = 13 (3) P = 7 , Q = 11

kalvi.lk


(09) 


A , B ஆகியன சமனான இரு பாத்திரங்கள் ஆகும். B யிலுள்ள நீரின் அளவு A யிலுள்ள நீரின் அளவை விட 3 லீற்றர் அதிகமாகும். இரு பாத்திரங்களிலும் உள்ள மொத்த நீரின் அளவு 19 லீற்றர் ஆகும். அதன்படி, B பாத்திரத்திலுள்ள நீரின் அளவு,

(1) 11 லீற்றர் (2) 10 லீற்றர் (3) 12 லீற்றர்

(10) மூன்று பாத்திரங்களில் முட்டைகள் உள்ளன. ஒவ்வொரு பாத்திரத்திலும் உள்ள முட்டைகளின் எண்ணிக்கைகள் ஒழுங்குமுறையில் 29, 30, 31 ஆகும். அவற்றுள் ஒரு பாத்திரத்தில் உள்ள வெள்ளை முட்டைகளின் எண்ணிக்கையை விட சிவப்பு முட்டைகள் 4 கூடுதலாக உள்ளன. அதன்படி, அப்பாத்திரத்திலுள்ள மொத்த முட்டைகளின் எண்ணிக்கை,

(1) 31 (2) 29 (3) 30

(11) 

ECO , WET , NAMES ஆகிய சொற்கள் இடமிருந்து வலமாகவும், MET , NOW ஆகிய சொற்கள் மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் மூன்றாவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் சொல்,


(1) NOW (2) MET (3) MEN

(12) RENDER எனும் சொல்லைக் குறியீடுகளினால் எழுதுவதற்குத் தேவைப்படும் குறியீட்டு வகைகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 4

(13) பெட்டியொன்றில் ஒரே சம அளவான பெரிய புத்தகங்கள் 9 அல்லது ஒரே சம அளவான சிறிய புத்தகங்கள் 27 வைப்பதற்கு இடமுண்டு. அப்பெட்டியில் 7 பெரிய புத்தகங்கள் உள்ளன எனின், இன்னும் எத்தனை ஒரே சம அளவான சிறிய புத்தகங்களை வைப்பதற்கு இடமுண்டு?


(1) 6 (2) 7 (3) 10

(14) 

உரு - 1 உரு - 2

உரு 1 இல் உள்ள புள்ளிகள் ஒன்றுடன் ஒன்று நேர்கோடுகளால் இணைத்து வரையப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கில் உரு 2 இல் உள்ள புள்ளிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து வரையக்கூடிய நேர்கோடுகளின் எண்ணிக்கை,

(1) 15 (2) 12 (3) 10

(15) 



A பாத்திரத்தை நீரினால் முழுமையாக நிரப்புவதற்கு B பாத்திரத்தினால் 4 தடவைகள் நீர் ஊற்ற வேண்டும். B பாத்திரத்தை நீரினால் முழுமையாக நிரப்புவதற்கு C பாத்திரத்தினால் 3 தடவைகள் நீர் ஊற்ற வேண்டும். C பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு 100 மில்லிலீற்றர் எனின், A பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு,


(1) 700ml (2) 1200ml (3) 1400ml


(16) ஒரு பெட்டியில் 12 கறுப்பு பேனைகளும், 9 சிவப்பு பேனைகளும், 10 நீல பேனைகளும் உள்ளன. ஒரு தடவைக்கு 2 கறுப்பு பேனைகள் வீதமும், ஒரு சிவப்பு பேனை வீதமும், ஒரு நீல பேனை வீதமும் வெளியே எடுக்கப்படுகின்றன. அவ்வாறு பேனைகளை வெளியே எடுக்கப்படக்கூடிய தடவைகளின் எண்ணிக்கை முடிந்தப் பின்பு பெட்டியில் எஞ்சியிருக்கும் பேனைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 7

(17) மேசையொன்றின் மீதுள்ள பேனைகளின் எண்ணிக்கை, பென்சில்களின் எண்ணிக்கையைப்போல இரு மடங்காகும். புத்தகங்களின் எண்ணிக்கை பேனைகளினதும், பென்சில்களினதும் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும். அதன்படி, இத்தகவல்களை மிகச் சரியாகக் காட்டும் வரைபு,


(1) 


(2) 



(3) 



(18) 



இவ்வுருவின் கோளமொன்றின் $\frac{1}{4}$ பகுதி காட்டப்பட்டுள்ளது. இத்திண்மத்தை முறிந்த கோட்டின் வழியே இரு துண்டுகளாக வெட்டுவதன் மூலம் கிடைக்கும் முகத்தின் வடிவம்,

(1)  (2)  (3) 

(19) பின்வரும் பழ வகைகளின் விலைகளைப் பரிசீலித்துப் பார்க்குக.










இவ்விலைகளின்படி, 3 பழ வகைகளினதும் விலைகளின் கூட்டுத்தொகை,


(1) ரூபாய் 150.00 (2) ரூபாய் 160.00 (3) ரூபாய் 170.00

kalvi.lk

(20) 



உரு A யினால் காட்டப்பட்டுள்ள கடதாசிக் கீலத்தை விரிக்கும்போது மடித்த இடங்களைச் சரியாகக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(21) 



இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்கள் தெரிவு செய்க.

(1) A = 3, B = 36 (2) A = 1, B = 16 (3) A = 2, B = 49

(22) 


நாணயக் குற்றியொன்று மேலே சுண்டிவிடப்பட்டபோது A, B ஆகிய பக்கங்கள் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, நாணயக் குற்றி மேலே சுண்டிவிடப்பட்ட மொத்தத் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 26 (2) 19 (3) 23

(23) 



இவ்வுருவில் பெரிய தராசு ஒன்றும், சிறிய தராசு ஒன்றும் காட்டப்பட்டுள்ளது. பெரிய தராசு சமநிலையடைவதற்கு சிறிய தராசின் C பக்கத்திற்கு இடவேண்டிய நிறை,

(1) 6kg (2) 4kg (3) 8kg

(24) கீழே தரப்பட்டுள்ள முதல் இரண்டு சொற்களுக்கும் இடையே ஏதோவொரு தொடர்புண்டு. அதேபோன்ற தொடர்பினைக் கொண்ட சொற்சோடி,

**வீட்டிற்கு - அத்திவாரம்போல**

(1) மரத்திற்கு - வேர் (2) வாகனத்திற்கு - எரிபொருள் (3) கடலிற்கு - நீர்



(25) 



உரு 1 இல் காட்டப்பட்டுள்ள சதுர வடிவான கம்பிச் சட்டகத்தை விரிப்பதன் மூலம் உரு 2 இல் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப, முக்கோண வடிவமான கம்பிச் சட்டகம் அமைக்கப்பட்டது. இம்முக்கோண வடிவக் கம்பிச் சட்டகத்தின் AC பக்கத்தின் நீளம்,

(1) 8cm (2) 9cm (3) 10cm

(26) முதலில் தரப்பட்டுள்ள உருக்கள் மூன்றிற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருவைத் தெரிவு செய்க,




(1)  (2)  (3) 

(27) 


தற்போது எலிக்கும் பூனைக்கும் இடையிலுள்ள தூரம் 4m ஆகும். எலி 2m முன்னோக்கி ஓடும்போது பூனை 4m முன்னோக்கி ஓடும். அதன்படி, பூனை எலியைப் பிடிப்பதற்கு ஓட வேண்டிய தூரம்,

(1) 8m (2) 12m (3) 6m

(28) 

இவ்வுருளை புள்ளிக்கோடுகளின் வழியே சிறிய துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, கிடைக்கும் வளைந்த மேற்பரப்புகளைக் கொண்ட திண்மங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 16 (3) 18

(29)

△ x △ = □


△ + △ = □

△ x □ = ................

அருகே குறியீடுகளின் மூலம் 10 விட குறைந்த எண்கள் காட்டப்பட்டுள்ளன. இத்தொடர்புகளின்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்,

(1) 9 (2) 6 (3) 8

kalvi.lk

(30) 

இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 1 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

(1) முடியும் (2) முடியாது (3) கூறமுடியாது

(31) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

சிவந்த சொண்டை நீட்டியே
சின்னக் கிளியும் கேட்குமே
உவந்து தந்த கனிகளை
உண்டு மழலை பேசுமே

சின்னக் கிளி எதைக் கேட்கும்?

(1) மழலை (2) சொண்டை (3) கனிகளை

(32) தரப்பட்ட சங்கிலித் துண்டுகளை இணைத்து மாலையாக மாற்றுவதற்கு குறைந்தபட்சம் எத்தனை சங்கிலி வளையங்களை கழற்றி ஒட்ட வேண்டும்?



(1) 6 (2) 12 (3) 5

(33) கீழே மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(34) பெட்டியொன்றில் 5 மஞ்சள் நிறப் பந்துகள், 8 பச்சை நிறப் பந்துகள், 10 சிவப்பு நிறப் பந்துகள் உள்ளன. பெட்டியைப் பார்க்காமல் பச்சை நிறப் பந்தொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியிலிருந்து குறைந்தபட்சம் ஒரே தடவையில் எடுக்க வேண்டிய பந்துகள் எத்தனை?

(1) 23 (2) 16 (3) 19

(35)

$$\begin{array}{rccc} & M & P & S \\ + & M & P & S \\ \hline & 9 & 7 & 8 \\ \hline\hline \end{array}$$

இக்கணிதச் செய்கையில் M, P, S, இன் பெறுமதி முறையே,


(1) 4 , 8 , 9 (2) 4 , 3 , 9 (3) 4 , 8 , 8

(36) பத்மாவிற்கு 5 பிள்ளைகள் உள்ளன. அவர்கள் ஒருவருக்கொருவர் இடையிலான வயது வித்தியாசம் 3 வருடங்கள் ஆகும். அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 35 ஆகும். அதன்படி, பத்மாவின் மூத்த பிள்ளையின் வயது,



(1) 14 (2) 13 (3) 16


(37) 8 மனிதர்கள் 10 நாட்களில் செய்யும் வேலையை 5 நாட்களில் முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை?

(1) 4 (2) 12 (3) 16

(38) 

ஒரேயளவான சில செங்கற்கள் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. இச்செங்கற் குவியலை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்துப் பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(39) 

இவ்வுருவை கனவுருவாக்குவதற்கு குறைந்தபட்சம் எத்தனை கோடுகள் வரைய வேண்டும்?

(1) 5 (2) 3 (3) 4

(40) ஓட்டப் போட்டியொன்றில் சிவா, நஸீர், வாசு ஆகிய 3 பிள்ளைகள் பங்குபற்றினர். ஓட்டப் போட்டியில் சிவா 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. நஸீர் 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. வாசு 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. சிவா 1 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதன்படி, ஓட்டப் போட்டியில் 1, 2, 3 ஆகிய இடங்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகளின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) நஸீர், வாசு, சிவா (2) வாசு, சிவா, நஸீர் (3) சிவா, நஸீர், வாசு

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-02

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ...........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

---

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

பச்சை பசேல் என காணப்படும் மலைப் பகுதியின் வழியே மோட்டார் வண்டியில் நானும் எனது நண்பனும் பயணித்தோம். அருகில் பள்ளமும் மேடுமான பகுதிகளில் வானை முட்ட வளர்ந்த காடுகளைக் கண்டேன். மகாவலி கங்கை நாங்கள் செல்லுமிடம் எல்லாம் வந்தது. கடும் மழை பெய்திருந்தமையினால் ஆற்று நீர் செங்கலங்களாக இருந்தது. இந்நீரைப் பார்த்தவுடன் அந்த ஆற்றைப் பற்றி ஒரு பாட்டுப்பாட வேண்டுமென்று எண்ணினேன். காவி நிற நீரைக் கண்டவுடன் அதைக் காவியாடை பூண்ட துறவியாகச் சொல்லலாம் என்று தோன்றியது. ஓரிடத்திலும் தங்காமல் பல இடங்களுக்குச் சென்று தன்பால் வந்தாருக்கு நன்மை செய்யும் இயல்பு துறவிக்கும் உண்டு. இந்த இயல்பு மகாவலி கங்கைக்கும் உண்டு. உண்மையான துறவிக்கு நெஞ்சிலே ஈரமுண்டு. இந்த ஆற்றுக்கோ ஈரமே இயல்பல்லவா. துறவி உள்ளழுக்கை நீக்க உதவுவான். இந்த ஆறும் புற அழுக்கை நீக்க உதவுகிறது. இதனை ஒப்புமை உடைய மகாவலி கங்கையைத் துறவராகச் சொல்வதில் என்ன தவறு?

(i) காடுகள் எங்கு வளர்ந்திருந்தன? ..............................................................................

(ii) மோட்டார் வண்டியில் எத்தனை பேர் பயணித்தனர்? ..............................................................................

(iii) ஆற்றில் செங்கலங்கள் நீர் ஓடுவதற்கு ஏதுவான நிகழ்ச்சி என்ன? ..............................................................................

(iv) பந்தியின்படி பாட்டு பாட எண்ணியவர் யார்? ..............................................................................

(v) ஆற்றுக்கும் துறவிக்கும் பொதுவான தன்மைகள் என்ன? ..............................................................................

(vi) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்க்கருத்துச் சொற்சோடியை எழுதுக. ..............................................................................

**(02) பின்வரும் பழமொழியின் மீதிப் பகுதியினைப் பூரணப்படுத்துக.**

ஆற்றிலே போட்டாலும் ..............................................................................

**(03) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

குமார் சத்தமாகப் பாடம் வாசிக்க ஆசிரியர் அதை அவதானித்தார்.

(i)........................................................ (ii)........................................................

**(04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

இரு / வீதியின் / நின்றன / நிழல் / பக்கங்களிலும் / மரங்கள் / தரும்.

..............................................................................

**(05) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) தொழிற்பெயரைக் குறிக்கும் சொல் :- ( இனிப்பு , ஓடுதல் , இலை )

(ii) சினைப்பெயரைக் குறிக்கும் சொல் :- ( வீடு , காகம் , விரல் )

**(06) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) பசுக்கண்று , பசுக்கன்று , பசுக்கன்ரு

(ii) மிளகாய்ச்செடி , மிழகாய்ச்செடி , மிலகாய்ச்செடி

(iii) இரைவன் , இறைவண் , இறைவன்

(iv) விடாமுயற்சி , விடாமுயர்ச்சி , விடாமுயற்ச்சி

**(07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) காகம் கரையும் என்பது போல ஆந்தை ................................ ( உறுமும் , அலறும் , கத்தும் )


(ii) மயில் அகவும் என்பது போல பல்லி ................................ ( கீச்சிடும் , சீறும் , சொல்லும் )

**(08) பின்வரும் இணைமொழிகளின் கருத்துக்களை எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

(i) கண்ணும் கருத்தும் :- ................................ (ii) எலும்பும் தோலும் :- ................................

kalvi.lk

(09) **கீழே பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட கடிதம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இக்கடிதத்தின்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.**




(i) கடிதத்தைப் பெறுபவரின் பெயர் யாது? ..............................

(ii) கடிதத்தை அனுப்பியவர் எந்த நகரத்தில் வசிக்கிறார்? ..............................

(iii) 61000 எனும் இலக்கத்தினால் குறிக்கப்படுவது யாது? ..............................

(10) **பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(i)  :- ..............................

(ii)  :- ..............................

(11) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) I am ................. ( go / going ) to the canteen. (ii) ................. ( Is / Are ) this your bag?

(12) **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) You may fall :- .............................. (ii) Be careful :- ..............................

(13) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**


நாம் சோறு சாப்பிடுவோம் :- ..............................

(14) **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

அ(ப்)பி செல்லம் கறமு :- ..............................


(15) 5792 எனும் எண்ணில், (i) இலக்கம் 7 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? ..............................

(ii) இலக்கம் 5 அமைந்துள்ள இடம் யாது? ..............................


(16) 

4 மணிக்கு 20 நிமிடங்கள் என்பதை இக்கடிகார முகத்தில் வரைந்துக் காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)


(17) அருகேயுள்ள எண்ணை விரித்து எழுதுக. 7914 = ................ + ................ + ................ + ................

(18)  இக்கனவுருவின், (i) 10 எனும் எண்ணை திட்டத்தில் உரோம எண்குறியில் எழுதுக.

(ii) 8 எனும் எண்ணை பக்கத்தோற்றத்தில் உரோம எண்குறியில் எழுதுக.

(19)  இச்சதுரத்தின் சமச்சீர் அச்சுக்களைத் தெளிவாக வரைந்துக் காட்டுக.

(20) 3 , 9 , 15 , 21 , 33 , 39 எண் கோலமொன்றை அமைப்பதற்கு இவ்வெண்வரிசைக்குச் சேர்க்கப்பட வேண்டிய எண் யாது? ..............................

(21) 


(i) இக்கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..............................


(ii) அமைக்கப்பட்டுள்ள திண்மத்திலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

(22)

| | |
|---|---|
| 7 | 9 |
| 1 | 4 |

இக்கட்டத்திலுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய நான்கு இலக்கங்களைக் கொண்ட மிகச் சிறிய எண்ணை எழுதுக. ..............................

(23) 




மேலே A, B ஆகிய இரு பென்சில்களினதும் நீளங்கள் சென்ரிமீற்றர்களில் அளக்கப்பட்டுள்ள முறையை மேலேயுள்ள இரு உருக்களிலும் காட்டப்பட்டுள்ளன. இவ்விரு உருக்களுக்கேற்ப, B பென்சிலை விட A பென்சில் எவ்வளவு நீளம் கூடியதாகும்? ..............................

(24) பாடசாலையொன்றில் உள்ள மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை 3265 ஆகும். அதில் 1721 ஆண் பிள்ளைகளாவர்.

அதன்படி, பாடசாலையிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..............................

(25) கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. அவ்விலைப்பட்டியலின்படி, பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| விலைப்பட்டியல் | | ரூபாய் சதம் |
|---|---|---|
| பால் | 500ml | 80 . 00 |
| சீனி | 250g | 40 . 00 |
| துணி | 1m | 300 . 00 |

| பொருட்களின் வகைகள் | கொள்வனவு செய்த அளவு | ரூபாய் | சதம் |
|---|---|---|---|
| (i) சீனி | 1kg | | |
| (ii) துணி | 50cm | | |
| (iii) பால் | 1*l* | | |
| (iv) | கூட்டுத்தொகை | | |

kalvi.lk

சுட்டெண்:-.........................................

(26) பிள்ளையொன்றிடம் 24 பேனைகள் உள்ளன. அவற்றில் $\frac{1}{4}$ சிவப்பு நிறப் பேனைகளாகும். மீதிப் பேனைகள் நீல நிறமானவையாகும். அதன்படி, அப்பிள்ளையிடமுள்ள நீல நிறப் பேனைகளின் எண்ணிக்கை யாது? .........................

(27) மு.ப 9.30 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட பேருந்து பி.ப 5.00 மணிக்கு திருகோணமலையை வந்தடைந்தது. அதன்படி, பேருந்து கொழும்பில் இருந்து திருகோணமலையை அடைவதற்கு எடுத்த நேரம் யாது? .........................

(28) பெட்டியொன்றில் 6 நீல நிறப் பேனைகளும், 4 சிவப்பு நிறப் பேனைகளும், 5 கறுப்பு நிறப் பேனைகளும் உள்ளன. அதன்படி, அவ்வாறான 5 பெட்டிகளில் இருக்கும் பேனைகளின் மொத்த எண்ணிக்கை யாது? .........................

(29) ஆடைத் தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | காற்சட்டை | சட்டை |
|---|---|---|
| மார்ச் | 875 | 1463 |
| ஏப்ரல் | 1898 | 1239 |

(i) மார்ச், ஏப்ரல் மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட காற்சட்டைகளின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் யாது? .........................

(ii) ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த ஆடைகளின் எண்ணிக்கை யாது? .........................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மூன்று வகையான உணவுகளின் மேலுறைகளில் உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதி அச்சிடப்பட்டுள்ள முறை கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| உணவு வகைகள் | உற்பத்தித் திகதி | காலாவதியாகும் திகதி |
|---|---|---|
| பொதி செய்யப்பட்ட பாண் | 2024. 02. 13 | 2024. 02. 15 |
| யோகட் | 2024. 02. 15 | 2024. 11. 10 |
| தயிர் | 2024. 01. 03 | 2024. 01. 10 |

இவ்வட்டவணையின்படி, காலாவதியாகும் திகதி பிழையாக அச்சிடப்பட்டுள்ள உணவு வகை,

(1) பாண் (2) யோகட் (3) தயிர்

(31) பூக்கும் திகதிக்கும் வாடும் திகதிக்கும் இடையே உள்ள நேரம் படிப்படியாக அதிகரிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள பூக்களின் பெயர்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) கடுபுல் - செவ்வரத்தை - அந்தூரியம் (2) செவ்வரத்தை - கடுபுல் - அந்தூரியம்

(3) அந்தூரியம் - செவ்வரத்தை - கடுபுல்


(32) கடையொன்றில் விற்பனைக்காக இருந்த பால் பைக்கற்று ஒன்றின் மேலுறையில் பச்சை நிற வட்டமொன்று அச்சிடப்பட்டுள்ளது. அதனால் கருதப்படுவது,

(1) சீனி அதிக அளவில் உள்ளது என்பதாகும். (2) சீனி மத்திம அளவில் உள்ளது என்பதாகும்.

(3) சீனி குறைந்த அளவில் உள்ளது என்பதாகும்.

Education கல்வி

(33) 2 உலர்கலங்கள் செப்புக்கம்பியின் மூலம் மின்குமிழொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவ்வுருக்களுக்கேற்ப, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) A மின்குமிழ் ஒளிரும், B மின்குமிழ் ஒளிராது.

(2) A, B ஆகிய இரு மின்குமிழ்களும் ஒளிராது.

(3) A மின்குமிழ் ஒளிராது, B மின்குமிழ் ஒளிரும்.

(34) பின்வரும் உணவு வகைகளில் உடலுக்கு சக்தியையும் வளர்ச்சியையும் வழங்குவதற்கு உட்கொள்ள வேண்டிய உணவு வகைகள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) மரவள்ளி - கருவாடு (2) இறைச்சி - சோறு (3) முட்டை - வல்லாரை

(35) சடுகுடு, தாயம் போடுதல் என்பது,

(1) இரு தையல் வகைகள் (2) வயல் உழுதலுக்கான இரு முறைகள் (3) இரு கிராமிய விளையாட்டுக்கள்

(36) மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்,

(1) சீகிரியா (2) எம்பக்கை தேவாலயம் (3) இசுறுமுனிய

(37) செய்தித்தாளில் மிகச் சிறிய எழுத்துக்களை பெரிதாக்கப் பார்ப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,




(1) கைவில்லை (2) தொலைக்காட்டி (3) நுணுக்குக்காட்டி

(38) "கழுகு" தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வானில் மிக உயரத்தில் பறக்கின்ற பறவையாகும். (2) கூர்மையான கண்களையுடைய பறவையாகும்.

(3) அனைத்தும் உண்ணிப் பறவையாகும்.

(39) "கம்பளித் தையல்" காட்டப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(40) இலங்கையின் அரச இலச்சினையில் **காணக்கிடைக்காத** குறியீடு,

(1) தர்மச்சக்கரம் (2) நிறைகுடம் (3) கொடி அலங்காரம்

(41) மண்புழுவினால் செய்யப்படும் சேவை,

(1) மண்ணரிப்பைத் தடுத்தல். (2) மண்ணை வளமாக்க உதவும். (3) மண்ணில் உள்ள பூச்சிகளை அழிக்க உதவும்.

kalvi.lk

(42) நகரிலுள்ள உணவகம் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அசுத்தமான உணவுகள் பற்றி தெரிவிக்க வேண்டிய அரச அதிகாரி,

(1) பொது சுகாதாரப் பரிசோதகருக்கு (2) கிராம சேவகருக்கு (3) அரச வைத்தியசாலையின் பிரதான வைத்தியருக்கு

(43) "வாந்திபேதி" எமக்கு ஏற்படுவது,

(1) சீனி அதிகம் உள்ள உணவுகளை தினமும் உட்கொள்வதன் மூலம் (2) நுளம்பு கடிப்பதன் மூலம்

(3) அசுத்தமான நீரை பருகுவதன் மூலம்

(44) தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் வர்ணங்கள்,

(1) சிவப்பு, வெள்ளை, மஞ்சள், பச்சை (2) மஞ்சள், பச்சை, செம்மஞ்சள், சிவப்பு (3) செம்மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு




(45) ஒத்த வடிவத்தை உடைய தாவர இலைகள்,

(1) வேம்பு, ஆமணக்கு, அரசு (2) வெண்டி, பூசனி, மரமுந்திரிகை (3) மிளகு, வட்டக்கண்ணி, வெற்றிலை

(46) அமாவாசை தினத்திலிருந்து 7 நாட்களுக்கு முன் வானில் சந்திரன் காணப்படும் வடிவத்தைக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(47) ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வளையங்கள் அமைந்துள்ள சரியான முறை,

(1)  (2)  (3) 

(48) துவிச்சக்கரவண்டி ஒன்றிலுள்ள பற்சில்லுகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இரு பற்சில்லுகளும் அளவில் சமனானது. (2) பின் பக்கமுள்ள பற்சில்லை விட முன் பக்கமுள்ள பற்சில்லு பெரியது.

(3) முன் பக்கமுள்ள பற்சில்லை விட பின் பக்கமுள்ள பற்சில்லு பெரியது.

(49) எமக்கு அதிகளவான நோய்களைப் பரப்பும் பிராணி,

(1) வீட்டு ஈ (2) எலி (3) நுளம்பு

(50) எமக்கு வானவில்லின் நிறங்கள் தென்படக்கூடிய சந்தர்ப்பம் **அல்லாதது**,

(1) முகம் பார்க்கும் கண்ணாடியின் மீது சூரிய ஒளி விழும்போது

(2) விசிறிய நீர்த்துளிகளில் சூரிய ஒளி விழும்போது (3) மிதக்கும் சவர்க்காரக் குமிழ்களில் சூரிய ஒளி விழும்போது

(51) கொல்லன் கம்மாலையில் "பட்டடை" என்னும் உபகரணத்தை பயன்படுத்துவது,

(1) நன்றாகக் காய்ச்சிய இரும்பை எடுப்பதற்கு (2) காய்ச்சிய இரும்பை தட்டுவதற்கு

(3) நெருப்பு எரிவதற்கான காற்றை வழங்குவதற்கு

(52) பண்டுகாபயன் மன்னன் கட்டுவித்த குளம்,

(1) பராக்கிரம சமுத்திரம் (2) திஸாவாவி (3) அபயவாவி ( பசவக்குளம் )

(53) இலங்கைத் தேசிய இலச்சினையில் உள்ள குறியீடுகளையும் அவற்றினால் குறிக்கப்படுவனவற்றையும் சரியாகக் காட்டும் விடை,

(1) சூரியன், சந்திரன் - சௌபாக்கியம் (2) பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் - தார்மீகம்

(3) நெற்கதிர்கள் - தன்னிறைவு

(54) நாம் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவிக்கொள்ள வேண்டிய மிக முக்கிய சந்தர்ப்பங்கள்,

(1) மலங்கழித்த பின்பும், உணவு உட்கொள்ள முன்பும் (2) மலங்கழிப்பதற்கும் முன்பும், உணவு உட்கொண்ட பின்பும்

(3) மலங்கழித்த பின்பும், உணவு உட்கொண்ட பின்பும்.

(55) பாலின் மூலம் உற்பத்தி **செய்யப்படாத** உணவு வகைகள்,

(1) வெண்ணெய், தயிர் (2) வினாகிரி, ஜெலி (3) யோகட், பாற்கட்டி

(56) வீட்டில் உணவு உண்ட பின்னர் நாம் செய்ய வேண்டிய நற்பழக்கம் ஒன்று,

(1) மீதப்பட்ட உணவை மேசைக்குக் கீழ் உள்ள செல்லப்பிராணிகளுக்கு வீசுதல்.

(2) பயன்படுத்தியப் பாத்திரத்தை மேசையின் மீது கழுவாமல் வைத்துச் செல்லல்.

(3) கையையும் வாயையும் சுத்தம் செய்துக் கொள்ளல்.

(57) தலைக்கவசம் அணிந்து தொழிலில் ஈடுபட வேண்டியவர்,

(1) தச்சுவேலை செய்பவர் (2) கல் உடைப்பவர் (3) வயல் வேலை செய்பவர்

(58) இலங்கை நாட்டில் வரலாற்றுடன் தொடர்புடைய புனித வெள்ளரசு மரம் காணப்படும் இடம்,

(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை (3) சீகிரியா

(59) இலங்கையின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள புனித நகரம்,

(1) தம்புள்ள (2) கதிர்காமம் (3) மிகிந்தலை

**(60) "நான் விரும்பும் விளையாட்டு" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

kalvi.lk